[1971 டிசம்பர் 13

திருமதி த. ந. அனந்தநாயகி : எத்தனை பேர் அங்கு வாடகை கொடுக்காமல் இருக்கிறார்கள் ? யாருக்கு ஒதுக்கப்பட்டதோ, அவர்கள் குடியில்லாமல் வேறு யாராவது இருக்கிறார்களா? இதையெல்லாம் கவனித்து சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதைப் பற்றிய புள்ளி விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அதற்கான நடவடிக்கைகளை வீட்டு வசதி வாரியம் தக்கபடி மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வீட்டு வாடகை கொடுக்காததை பற்றி அல்ல வீட்டு வாடகை வாங்க மறுத்தது பற்றி.

Procession by staff of Electricity Board

* 338. Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there was any protest procession by the staff of the Electricity Board at Madras about 18th August 1971 against the transport crew; and

(*b*) if so, ,the details of the action taken in this connection?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (ஆ) விவர அறிக்கை @ மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவரவர்களே, மின்சாரத் தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற போது, வேறு பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது, ஆகவே, மோதல் ஏற்பட்டது என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது . எனவே, மின்சாரத் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய நேரத்தில் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாத முறையில் வேலை செய்யும் சூழ்நிலையை அரசு உண்டாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்த இடைஞ்சல் தற்செயலாக ஏற்பட்ட ஒன்று. வழக்கமாக ஏற்படுவதல்ல. மின்வாரியத் தொழிலாளர்கள் மின் கம்பங்களை நட்டுக் கொண்டிருக்கும்போது, வீதியில் நடந்தது. எனினும், இடைஞ்சல் இல்லாத முறையில் இனிமேல் நடைபெற போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மின்வாரியப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு

* 339. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-ம் ஆண்டு மே மாதம் மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டதா?

@ 85-ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

1971 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழ்நாடு மின்சார வாரியப்பணியாளர் சம்பள விதங்கள் 1—12—1969 நாளிலிருந்து செயல்படுமாறு 1970-மேத் திங்களிலும், ஜுன் திங்களிலும் மாற்றி அமைக்கப்பட்டன.

பழைய சம்பள விதங்களையும் புதிய சம்பள விதங்களையும் காட்டுகிற விவர அறிக்கை † பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீநகரில் அனைத்துஇந்திய போக்குவரத்து ஏற்பாடு

*340. **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 16—8—1971 அன்று போக்குவரத்து அமைச்சர் அவர்கள் ஸ்ரீநகரில் நடைபெற்ற அகில இந்திய போக்குவரத்து மாநாட்டில் கலந்து கொள்ளச்சென்ருரா?

(இ) ஆம் எனில், அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) போக்குவரத்து மேம்பாட்டு மன்றத்தின் ஒன்பதாவது கூட்டம் 1971 ஆகஸ்டு 18, 19 நாட்களில் ஸ்ரீநகரில் நடந்தது. அதில், போக்குவரத்து அமைச்சரும் மாநில அரசின் ஏனைய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(இ) கூட்டத்தின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. கே. ஏ. வகாப் : பேரவைத் தலைவரவர்களே, இந்த இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மற்ற மாநிலங்கள் எல்லாவற்றையும் விட கேரளாவில் போக்குவரத்து இலாக்கா மிகவும் சீராக பணியாற்றி வருகிறது என்று சொல்கிருர்கள். எனவே, அம்மாநிலத்தின் போக்குவரத்து இலாக்காவின் நடைமுறைகளை இம் மாநிலமும் பின்பற்ற ஆலோசனை செய்து பலன் பெற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே இந்த மாநாட்டில் இந்தியத் துணைக்கண்டத்தின் பொதுப் படையான போக்குவரத்து பிரச்னைகள் மட்டுமே பேசப்பட்டன. கேரள மாநிலத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்ஞர்கள். அம் மாநிலத்தில், சென்னையைப் போல ஒரு பெரிய நகரம் இல்லை என்பதைக் கூற விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, பக்கிங்காம் கால்வாயில் போட் விடலாம் என்ற யோசனை இருந்தது. அந்த யோசனை ஸ்ரீநகரில் விவாதிக்கப்பட்டதா? மத்திய அரசு என்ன சொன்னது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, பக்கிங்காம் கால்வாய் விரிவு படுத்தப்பட வேண்டும். மேம்பாடு செய்யப்பட வேண்டும், அதை போக்குவரத்துக்கு

(† [redacted]ம் பக்கத்தில் மூன்றும் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.